


13.9.2024

தலைப்புச் செய்திகள்

- பாராலிம்பிக் போட்டியில் விளையாட்டு வீரர்களின் வெற்றி அனைவருக்கும் உத்வேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.
- தஞ்சை - விக்கிரவாண்டி இடையே 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புறவழிச்சாலை பணிகளை மத்திய அமைச்சர் திரு.நிதின் கட்காரி இன்று ஆய்வு செய்கிறார்.
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மினி பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
- திருச்சியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 24 மணி நேர குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.
- வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் துருவ் டனிஷா இணை – சதீஸ் ஆத்யா இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

பாராலிம்பிக் போட்டியில் பதக்கங்களை குவித்த வீரர்களின் வெற்றியும், மனப்பாங்கும் அனைவருக்கும் உத்வேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்ற தடகள வீரர்களுடன் புதுதில்லியில் இன்று கலந்துரையாடிய பிரதமர், இவ்வீரர்களுக்கு பயிற்சி அளித்த பயிற்சியாளர்களை வெகுவாக பாராட்டினார்.

மாற்றுத்திறன் படைத்த வீரர்களுக்கு விளையாட்டு நுட்பங்களுடன், வாழ்க்கையை எதிர்நோக்கும் திறனையும், பயிற்சியாளர்கள் பயிற்றுவித்தது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்..

இதற்காக பயிற்சியாளர்கள் தங்கள் மனதை தயார்படுத்திக்கொள்வது முக்கியமானது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இப்போட்டியில் தங்க பதக்கம் வென்ற சுமித் ஆண்டில் தமக்கு கிடைத்த தங்கப்பதக்கத்தை பிரதமருக்கு அர்ப்பணித்தார்.

கடந்த டோக்கியோ போட்டியின் போது 2 பதக்கங்களை வெல்ல பிரதமர் அளித்த உத்வேகத்தை எடுத்துரைத்த அவர், பாரா விளையாட்டு போட்டிகளுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வழங்கும் அங்கீகாரம் தனித்துவமானது என்று குறிப்பிட்டார்.

ஏனைய விளையாட்டு வீர வீராங்கனைகளும் பிரதமரின் ஆதரவு தங்கள் மன அழுத்தத்தை கட்டுப்படுத்த பெரிதும் பயனளித்ததாக கூறினர்.

************

நிதின்கட்காரி

தஞ்சை - விக்கிரவாண்டி இடையே அமைக்கப்பட்டுள்ள புதிய புறவழிச்சாலையை மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்காரி இன்று பிற்பகல் நேரில் ஆய்வு செய்கிறார்.

நான்காயிரம் கோடி ரூபாய் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

ஜிதேந்திராசிங்

தூய்மை பாரத இயக்கத்தின் 4ஆவது கட்டமான ஸ்வச்சதா இயக்கத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் வகையில் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சிறப்பு இணையதளத்தை இன்று அறிமுகம் செய்கிறார்.

மத்திய அரசின் அனைத்து அலுவலகங்களிலும் தூய்மை இயக்கத்தை முன்னெடுத்துச்செல்வதை உறுதி செய்யும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மத்திய அரசு அலுவலகங்களில் தேங்கி கிடக்கும் கோப்புகளை அகற்றி இணையதளம் மூலம் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் 2ஆம் தேதியிலிருந்து அம்மாதம் இறுதிவரை தூய்மை பாரத இயக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்முன்னோடியாக வரும் 16ஆம் தேதிமுதல் இம்மாதம் இறுதிவரை ஸ்வச்சதா இயக்கத்தின் முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

************

மின்னணு பேருந்து

பிரதமரின் மின்னணு பேருந்து சேவை பணபரிவர்த்தனை பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 38 ஆயிரம் மின்சார பேருந்துகள் இயக்க வகை செய்யப்பட்டுள்ளதாக மத்திய கன ரக மற்றும் எ∴கு துறை அமைச்சர் திரு.எச்.டி. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அமைச்சரவை இந்த திட்டத்திற்கான ஒப்புதலை அண்மையில் வழங்கியதை சுட்டிக்காட்டினார்.

இதன்படி 3 ஆயிரத்து 435 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கூறிய அவர் இப்பேருந்துகள் செயல்பாட்டிற்கு வரும் காலத்திலிருந்து 12 ஆண்டுகள் இந்த திட்டத்தின் கீழ் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் கூறினார்.

************

அரவிந்த் கெஜ்ரிவால்

கலால் கொள்கை முறைகேடு வழக்கில் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதலமைச்சருமான திரு.அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமின் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக திரு.கெஜ்ரிவாலின் ஜாமின் மனு மீது விசாரணை மேற்கொண்ட நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, இவ்வழக்கு தொடர்பான கருத்துக்கள் எதையும் தெரிவிக்க கூடாது என்பதோடு, அனைத்து விசாரணைகளுக்கும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஜாமின் வழங்கியது.

************

மத்திய அரசு – உணவு பாதுகாப்பு

பண்டிகை காலங்களை ஒட்டி இனிப்பு பண்டங்கள் மற்றும் பால் உற்பத்தி பொருட்களின் தரத்தை மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் முனைப்புடன் கண்காணிப்பதன் அவசியத்தை மத்திய உணவு பாதுகாப்பு தர ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

முறைகேடுகளை தடுக்க அவ்வப்போது, சோதனைகளை நடத்த இந்த ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

பண்டிகை கால தேவைகள் அதிகரிப்பதால் உணவு பண்டங்களில் கலப்படங்களுக்கு வாய்ப்பிருப்பதை கருத்தில் கொண்டு அவற்றை முழு வீச்சில் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நுகர்வோர்களின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிப்பதன் அவசியத்தை உணவு ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

************

முதலமைச்சர்

ஒசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமேட்டிக்ஸ் உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிகாகோவில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முதலமைச்சரின் அமெரிக்க பயணத்தின் மூலம் 7 ஆயிரத்து 616 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

18 முன்னனி நிறுவனங்களுடன் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில் முதலமைச்சர் அமெரிக்காவில் தமது அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை புறப்பட்டுள்ளார்.

************

ஆதார்

ஆதார் எண்ணை புதுப்பிப்பதற்கான கால அவகாசத்தை வரும் டிசம்பர் 14ஆம் தேதிவரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

முன்னதாக இதனை இலவசமாக புதுப்பிக்க நாளையுடன் கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு மேலாக ஆதார் எண்ணை புதுப்பிக்காதவர்கள் ஆதார் சேவை மையங்களில் இணையதளம் வாயிலாக புதுப்பித்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

************

உக்ரைன்

நெடுந்தொலைவு தாக்குதல் நடத்தும் ஏவுகணைகளை மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு வழங்குவதன் மூலம் ரஷ்ய – உக்ரைன் போரில் அவை நேரடியாக ஈடுபடுவதாக கருதப்படும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

ரஷ்ய தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில் அத்தகைய சூழலில் சம்மந்தப்பட்ட நாடுகளின் மீது முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் சூழலுக்கு ரஷ்யா தள்ளப்படும் என்றும் கூறியுள்ளார்.

அத்தகைய முடிவு மேற்கொள்ளப்பட்டால் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய, நேட்டோ நாடுகள் இப்போரில் பங்கெடுப்பதாக கருத்தில் கொள்ளப்படும் என்று அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நாடு மேற்கத்திய தோழமை நாடுகளிலிருந்து நெடுந்தொலைவு தாக்குதல் ஏவுகணைகளை கோரி வருவதாகவும்,

உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கான தடைகளை இலகுவாக்க வெள்ளை மாளிகை முடிவு செய்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள சூழலில் அதிபர் புட்டினின் இந்த கூற்று முக்கியத்துவம் பெறுகிறது.

************

சிவசங்கர்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவைக்கேற்ப மினி பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களிலும், மினி பேருந்துகளை இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மின்சார பேருந்துகளை இயக்குவதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

- - வாய்ஸ் - -

************

கே.என்.நேரு

திருச்சியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 24 மணி நேர குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மாநகராட்சியில் உய்யகொண்டான் திருமலை செல்வநகர் பகுதியில் அம்ரித் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதை வடிகால் திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், இதன் மூலம் 141 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய்கள் அமைத்து 16 ஆயிரத்து 500 வீடுகளுடன் இணைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

திருச்சியில் 9 இடங்களில் கழிவு நீர் உந்து நிலையங்கள் அமைக்கப்படும் என்றார்.

தொடர்ந்து திருச்சி காஜாமலையில் தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை நியாயவிலை கடைகளுக்கான புதிய கட்டிடங்களையும் அமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

************

## nghd;Kb

சென்னை பல்கலைகழக பட்டமளிப்பு விழா வரும் 24 ஆம் தேதி நடைபெறும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பி.எட்., கல்வியியல் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு வரும் 16ஆம் தேதி தொடங்கும் என்றார்.

வாய்ஸ்

************

தங்கம் தென்னரசு

சென்னையில் மின்விநியோகத்தை சீரமைக்க போர்க்கால அடிப்படையில், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையின் முக்கிய மின்சார மையமான மணலி துணைமின்நிலையத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதால், மின்விநியோகம் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இருப்பினும், சிரமங்களை தடுக்க மாற்று வழிகளில மின்சாரம் வழங்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும்,

நள்ளிரவுக்குள் 100 சதவீத மின்விநியோகம் சீரமைக்கப்பட்டதாகவும் திரு.தங்கம் தென்னரசு எடுத்துரைத்தார்.

************

பன்னீர்செல்வம்

அரியலூர் மாவட்டம் கீழணையிலிருந்து சம்பா சாகுபடி பாசனத்திற்கான தண்ணீரை மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் இன்று திறந்து வைத்தார்.

இதன்மூலம் அரியலூர் மாவட்டத்தில் 92 ஆயிரத்து 853 ஏக்கர் நிலமும்,

தஞ்சாவூர் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 903 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும்.

************

எடப்பாடி

தமிழகத்தில் குற்ற சம்பவங்களை தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒரத்தநாடு, மேட்டுப்பாளையம், பர்கூர் ஆகிய பகுதிகளில் மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

************

குரூப் 2

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் குரூப்-2 குரூப்2-ஏ முதல்நிலை தேர்வு மாநிலம் முழுவதும் நாளை நடைபெறுகிறது.

சார்பதிவாளர், உதவி ஆய்வாளர், துணை வணிகவரி அலுவலர் உள்ளிட்ட 2 ஆயிரத்து 327 காலி பணியிடங்களுக்கு நடைபெறும் இத்தேர்வை 7 லட்சத்து 93 ஆயிரத்து 966 பேர் தேர்வு எழுத உள்ளனர்.

இதற்காக மாநிலம் முழுவதும் 2 ஆயிரத்து 763 தேர்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

************

இருவரி

தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணாக்கர் நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கேற்ப, 4 புதிய வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், 13 வாக்குச்சாவடிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சிக்கனமான தீவண உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் பொதுவிநியோக திட்ட சேவைகளை பெறுவதற்கான சிறப்பு முகாம் நாளை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு. பழனி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள பல்வேறு மருத்துவ பணியிடங்களுக்கு தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

************

கன்னியாகுமரி

கேரள மாநிலத்தில் திருவோணப்பண்டிகையை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விற்பனை இன்று பெருமளவு அதிகரித்துள்ளது.

நேற்று கிலோ 800 ரூபாய்க்கு விற்ற மல்லிகை மற்றும் பிச்சிப்பூ இன்று மூன்றாயிரம் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.

வயநாடு நிலச்சரிவால் ஓணம் பண்டிகை கொண்டாட்டங்கள் மந்தமாக காணப்பட்ட நிலையில், இன்று விற்பனை களைகட்டியுள்ளதால் பூ வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

************

பேட்மிண்டன்

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் Dhruv Kapila, Tanisha Crasto இணை - Sathish Karunakaran, Aadya Variyath இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************